Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 08 23 - 07 - 1992 வியாழக்கிழமை ஓசை 156

## தபால் திணைக்களம் அதிகார சபையாக மாறும்

தபால் திணைக்களம் வரும் டிசம்பர் மாதம் அளவில் அதிகார சபையாக மாற்றப்படவிருப்பதாக தபால் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். திறமையான நிர்வாகத்திற்கும் இலாபம் பெறும் நோக்கத்திற்குமாகவே அதிகார சபையாக மாற்றப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தபால் சேவையில் எல்லாத் தரத்திலுமாக சுமார் 25.000 பேர் கடமையாற்றுகின்றார்கள். தபால் திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்படும் போது இந்த ஊழியர்கள் தற்போது பெறும் சம்பளத்தைவிட 40 சதவிகிதம் அதிக சம்பளத்தைப் பெறுவார்கள். மொத்தம் 3350 உபதபாற் கந்தோர்களும், 530 பிரதமதபாற் கந்தோர்களும், 101 ஏஜென்சி தபாற் கந்தோர்களும் உள்ளன. (4 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுப்படை தலைமையகம் கலைபடுமா?

# பாதுகாப்பு அமைச்சிலும் மாற்றங்கள்

## தளபதிகள் மத்தியில் தோன்றிய முரண்பாடுகளின் எதிரொலி

(கொழும்பு)

சிறிலங்காகூட்டுப்படைத் தலைமையகத்திற்கும் இராணுவத் தலைமையகத்திற்கும்இடையில்அதிகரித்துவரும் முரண்பாடுகளை அடுத்து கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்படுமா? என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. இதேவேளை, பொலிஸ் இராணுவ சேவைகளின் உயர் மட்டத்திலும், பாதுகாப்பு அமைச்சு மட்டத்திலும் மாற்றங்கள் இடம் பெறலாம் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்கள் பல வர்த்தமாணி அறிவித்தல் மூலம் முப்படைகளின் தளபதிகளின் கையில் மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இராணுவத் தளபதிக்கும் கூட்டுப்படைத் தலைமைத் தளபதிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின.

இந்த முரண்பாடுகள் தற்பொழுது தீவிரமாகியதைத் தொடர்ந்து கூட்டுப்படைத் தலைமையகத்தை அரசாங்கம் கலைத்துவிடலாம் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை பொலிஸ் இராணுவ சேவையிலும், பாதுகாப்பு அமைச்சு மட்டத்திலும், முக்கிய மாற்றங்கள் இடம் பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவின் பதவிக் காலம் ஏற்கனவே நீடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கடமையில் இருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கூட்டுப்படைத் தலைமையகத்தில் முக்கிய மாற்றங்கள் இடம் பெறலாம் என இராணுவ வட்டாரங்களில் கருதப்படுகின்றது. மேலும் பாதுகாப்பு அமைச்சிலும் பல மாற்றங்கள் இடம்பெறலாம் எனவும் புதிய முகங்கள் இடம்பெறும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவருகிறது.

## வெற்றிலைக்கேணி பகுதியில் சிவில் நிர்வாகம்

### சிறிலங்கா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு தொடக்கம் ஆனையிறவு வரையிலான பிரதேசத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை ஏற்படுத்தும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சியில் ஈடுபட்டு இருப்பதாகவும், வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டு கடற்பகுதியில் மீனவர்கள் தொழில் செய்ய முடியும் என்றும் கூறப்படுகின்றது.

அண்மையில் இப் பகுதிக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா விஜயம் செய்ததாகவும் பலாலி இராணுவ முகாமில் நடை-

### கட்டுநாயக்காவில்

## தரித்துச் செல்வோர் மீது பரிசோதனை இல்லை

## 'குமணவில்' பொருள்கள் ஏற்றப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் தரித்துநிற்கும் 'குமண' என்ற கப்பலில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றப்பட்டு வருகின்றது.

மிகவிரைவில் இக்கப்பல் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைய இருக்கிறது.

அரிசி, மா, சீனி உட்பட மேலும் சில அத்தியாவசியப் பொருட்கள் இ கப்பலில் ஏற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (பா)

## பெறுபேறுகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டிற்கான க.பொத. சாதாரணதர விசேட பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சாத்திகளிற்குரிய பெறுபேறுகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டது. இவை ஒரு சில தினங்களில் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் கிடைக்கும்.

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் சிற்றூழியர் தரத்திலான பணியாளர் பன்னிரெண்டு பேரிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்

## நாளை மறுதினம் பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டிற்கான க.பொ.த.(உ/த) விசேடபரீட்சையின் முடிவுகள் நாளை மறுதினம் கொழும்பில் வெளியி (4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.செல்லக்கிளி அம்மான் நினைவஞ்சலிக் கூட்டம்

இலங்கையின் அரசியல் வரலாற்றை உலுக்கிய திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் பங்குபற்றி வீரச்சாவடைந்த

லெப. செல்லக்கிளி அம்மானின் 9-ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று திருக்கோணமலை மாவட்ட இடம் பெயர்ந்த மக்களால் அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத்திட்டத்தில் பிற்பகல் 4-00மணிக்கு நடைபெறும்.

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தை முன்னிட்டு பிற்பகல் 2-00 மணிபோல் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள மேஜர்-சுரேந்திரன் பாலர்பாடசாலை மாணவியரின் விளையாட்டுப் போட்டியும் இடம்பெற உள்ளது.

### கூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்து

## மேலதிக கப்பலுக்கான அனுமதி எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மேலதிக கப்பல்களை அனுப்பி வைப்பதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அனுமதியை யாழ். அரச அதிபர் எதிர்பார்த்த வண்ணம் உள்ளார்.

மேலதிக கப்பல்களை அனுப்பிவைக்கும்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமும் கூட்டுப்படைகளின் அதிகாரிகளிடமும் ஏற்கனவே யாழ் அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்திருக்கிறார். இக்கோரிக்கை கொள்கை அ (4 ஆம் பக்கம் பார்க்க)

### ஆங்கில ஆசிரியர்

## போட்டிப்பரீட்சை ஓகஸ்ட் 26-ல் நடைபெறும்

ஆங்கில ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்

ளது.

மேற்படி தகவலை கொழும்

பட்டுள்ளது.

ஒப்பரேசன் பலவேகய இரண்டு நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்

இராணுவ முகாமில் நடை பெற்ற பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

பிற நாடுகளுக்கு செல்லும் மார்க்கத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரித்து நிற்கும், தரித்துச்செல்லும் பயணிகளின்பயணப்பொதிகள் வழமையான சுங்கப் பரிசோதனைக்கு இனி உட்படுத்தப்பட மாட்டாது என்று உயர் சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது கால வரை இப்பயணிகளின் பொதிகளும், இலங்கைக்கு வரும் ஏனைய பயணிகளின் பொதிகளைப்போலவே

(4 ஆம பக்கம் பார்க்க)

நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் யாழ். அரச அதிபரின் முயற்சியினால் இவர்களுக் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (பா)

களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையும், கிராமசேவகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையும் அடுத்த மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி தகவலை கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு.மாணிக்கவாசகர் நேற்று யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

# தந்திரிமலை பிரதமபிக்கு குண்டு வெடிப்பில் பலி

(கொழும்பு)

அனுராதபுர மாவட்டத்திலுள்ள தந்திரிமலை பௌத்த விகாரையில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட வெடி விபத்தில் பிரதம குரு சங்கைக்குரிய புடபொங்கஸ்கட விமலஞான தேரோ கொல்லப்பட்டதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பௌத்த விகாரையில் இந்தப் பிக்குவின் அறையில் நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் குண்டுவெடிப்பு ஏற்பட்டதாகவும், பிக்கு அந்த நேரம் பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்ததாகவும்,

கைக்குண்டு ஒன்று வெடித்ததின் காரணமாகவேஇந்தச் சம்பவம்நிகழ்ந்ததாகவும், பிரதம பிக்குவின் அறையைத்தவிர விகாரையின் வேறு எந்த ஒரு பகுதிக்கும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தந்திரிமலை பௌத்த விகாரை அனுராதபுரம்- மன்னார் மாவட்ட எல்லைப் பகுதியில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக உடனடி விசாரணை நடத்தும்படி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதுடன்,

இதற்கென விசேடபொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றையும் அமைச்சு தந்திரிமலைக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

1992ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை அதிபர்கள் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் அவர்களிடம் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

# கிழக்கு மாகாணத்தில் பதற்றம் முஸ்லிம்கள் தாக்கலாமென அச்சம்

## மூன்று தமிழர்கள் பலி; வாகனம் சேதம்

(மட்டக்களப்பு)

கிழக்குமாகாணத்தில் பதற்றமான நிலைமை உருவாகியுள்ளதாகவும், தமிழர் - முஸ்லிம்கலவரமொன்றுஏற்படலாமென அஞ்சப்படுவதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனையிலும், வேறும் சிலநகரங்களிலும் முஸ்லிம்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும், வாகனங்கள் கல்வீச்சுக்குஇலக்காகுவதாகவும் வெரித்தாஸ் வானொலிநேற்றிரவு கூறியது.

அதில் மேலும் வாகனம் ஒன்றைசெலுத்திவந்த தமிழர் ஒருவர் கல்வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்ததால் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் இராணுவ வாகனம் ஒன்றுடன் மோதி ஒரு பொலிசார் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வாழைச்சேனையில் இரு தமிழர்கள் சடலங்களாக நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். ஆரையம்பதியை சேர்ந்த அருணாசலம், களுவங்கேணியை சேர்ந்த தங்கராசா, புஷ்பராசா என்னும் இவ் இருவரும் முஸ்லிம் கும்பலால் முன்னர் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். இத்துடன் வாழைச்சேனைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தமிழர் சடலங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

அண்மையில் வாழைச்சேனையிலுள்ள அகதி முகாம் ஒன்றிலிருந்து எட்டுத் தமிழர்கள் முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

# சிங்கள குடியேற்றத்திற்கு தீவிரமாக உழைத்த தேரோ

தந்திரிமலை விகாரையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பினால் கொல்லப்பட்ட விகாராதிபதி கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இடபகுதியில் தங்கியிருந்தவர் ஆவார். வவுனியா, முல்லைத்தீவு மற்றும் அனுராதபுர மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளிலும் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதற்கும் பாடுபட்டவர் ஆவார். இவர் தங்கியிருந்த விகாரை வளவிலேயே பாதுகாப்பு படைமுகாம் ஒன்றும் அமைக்கப்பட்டு இருந்தது. இவரது பாவனைக்காக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபரால் விசேட பஜிரோ ஜீப் வண்டி ஒன்றும் வழங்கப்பட்டு இருந்தது.

கட்டுக்கரை குளத்தை நிரப்பும் அருவியாற்று நீரை திசை திருப்புவதற்கும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டவரும் இவரே ஆகும். அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் ஒரு அரசாங்க அதிபரிலும் பார்க்க அதிகாரம் படைத்த சிங்களக் குடியேற்ற வாதியாக இந்த விகாராதிபதி செயற்பட்டுவந்தவர் என்பது குறிப்பிடத்தககது.

# உடுகம்பொலவின் பத்திரிகைப்பேட்டி அதிகாரிகளுக்கு ஒரு சவால்

(கொழும்பு)

பொலிசாரினால் தேடப்பட்டு வரும் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல ஞாயிறு பத்திரிகைகளுக்கு அளித்திருக்கும் பேட்டி அதிகாரிகளுக்கு ஒரு சவாலாக உள்ளது என பிரதிசொலிஸிட்டர் ஜெனரல் ஏ.ஆர். சி. பெரேரா தெரிவித்தார்.

உடுகம்பொலவுக்கு எதிராக அரசாங்கம் தொடுத்திருக்கும் வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபேயசேகர முன்னிலையில் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டபோதே பிரதி சொலிஸிட்டர் இவ்வாறு தெரிவித்தார்.

உடுகம் பொலவின் இருப்பிடத்தைக் கண்டறிய பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர்களின் வாக்கு மூலங்களை பதிவு செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

தானும் பேட்டியை படித்ததாக நீதிபதி லெஸ்லி அபேயசேகர தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில்; பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டில்வைத்துத்தான் பேட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்றும்,

பத்திரிகையில் பிரசுரமான உடுகம் பொலவின் படம் அண்மையில் எடுக்கப்பட்டதா?அல்லது பழைய படமா என்பது தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

குற்றப்புலனாய்வு தலைமை இயக்குனர் ஊடாக எதிரிக்கு மீண்டும் கட்டளை அனுப்புமாறு அரச சட்டவாதி கோரினார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி அந்தஉத்தரவை பிறப்பித்துள்ளார். அத்துடன் வழக்கை ஓகஸ்ட் 17 ஆம் திகதி வரை ஒத்திப்போட்டுள்ளார்.

அரசுக்கு எதிராக மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அனாதைச் சிறுவர்கள் பஜனைப் பிரார்த்தனை

(தம்பலகமம்)

அண்மைய சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்களால் தம் தாய் தந்தையரை பறிகொடுத்த ஐம்பதிற்கும் அதிகமான அனாதைச்சிறுவர்கள் தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் பஜனைப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

அனைவரும் ஒரேநிறமான சந்தன நிறத்தில் ஆடைஅணிந்து பஜனை பிரார்த்தனை செய்த காட்சி மனதை நெகிழச் செய்ததாகவும் அவ் ஆலயத்தில் நடைபெற்ற மறக்க முடியாத வைபவம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதி நிர்வாக சேவைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன

தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து செயலகங்களின் சேவைகளும், மேன்முறையீட்டு மன்றுக்கள், ஆரம்ப நீதிமன்றுக்கள், இணக்கமன்றுக்களினதும். சேவைகளும், செயற்பாடுகளும் 23-07-92ல் இருந்து எமது மறு அறிவித்தல் வெளியிடப்படும் வரை இடைநிறுத்தப் பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

காலத்தைப் பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகின்றது. ஐந்து நூல்களை வாங்கினால் ரூபா ஐம்பது பெறுமதியான மீரா பிரசுரம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. [2874]

### தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும். உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும். தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (2876)

### புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் களையோடை (பிட்டி) கண்ணகை அம்மன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுவருகிறது.

புதுமை பெற்ற கண்ணகை அம்மன் ஆலயம் இயற்கையின் அழிவினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தையடுத்தே அவ்வூர் மக்களால் நிதி சேகரிக்கப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. (05)

### ஆய்வுரை

(யாழ்ப்பாணம்)

சுவீடன் உப்சாலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர் சார்க் வரும் 28 ஆம் திகதி பி. ப 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி மண்டபத்தில் தமிழ் பௌத்த எண்ணக்கருஎன்னும் பொருள் பற்றி ஆய்வுரை ஒன்று நிகழ்த்தவுள்ளார். அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.


### பிரதேசசெயலகத்தின் நடமாடும் சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் நடமாடும் செயுலகம் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் வல்வெட்டித் துறையில் இயங்கத்தொடங்கியுள்ளது. நடமாடும் செயலக ஆரம்ப விழா வல்வெட்டித் துறை நகரசபைச் செயலாளர் திரு. ச. ஞானவேல் தலைமையில் நடைபெற்றது. வல்வெட்டித்துறை அம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. தண்டபாணி தேசிகர் ஆசியுரை வழங்கினார். பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு. ச. முருகேசபிள்ளை சம்பிரதாய பூர்வமாக நடமாடும் செயலகத்தைஆரம்பித்து வைத்தார்

---

## 2-ம் ஆண்டுநினைவுஅஞ்சலி



23-07-1990 அன்று கோட்டை இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

### வீரவேங்கை அமுது

(ஐயாச்சாமி கிருஸ்ணமூர்த்தி)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 01.03.1971 | 23-07 1990 |

விடுதலை வேட்கையினால் - உனை
புலி வீரருடன் இணைத்துக் கொண்டாய்
கோட்டையை மீட்க களத்திலே மடிந்தாய்
வீரனே உன் இலட்சியம் ஈடேறும் நாள்
வெகுதூரத்திலில்லை என்பது உறுதி

அன்னாளில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைவருக்கும் எமது அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

இப்படிக்கு
பருத்தித்துறை. சுப்பர்மடம் வாழ் மக்கள்
(2863)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப் பிறப்பு: | வீரச் சாவு: |
|---|---|
| 02 | 23 |
| — | — |
| 01 | 06 |
| — | — |
| 1974 | 1992 |

### வீரவேங்கை கங்காமுனி

(யேசுதாசன் பேர்னாட்சா)

உயிரின் உயிராக உள்ளத்தில் வாழ்ந்தாய்
பயிராய் இருக்கையிலே பாதியிலே கொய்தாரே
எல்லாமே நீயாக எங்களுக்கு இருந்தாயே
பொல்லர் செயலாலே பொய்யாகிப் போனதுவே
ஐயா! உன் நினைவன்றி யாது மறியோமே
மெய்யாக இவ்வுலகில் வேறு துணை யாரையா?
மண் மீட்கச் சென்றவனே மானமுடையவனே
கண் போன்ற எங்கள் கங்காமுனி என்னும்
மாவீர நீ வாழ்க வையம் உள் வரைக்கும்
உன் பேர் நிலைக்குமையா; கர்த்தரது பாதத்தில்
என்றும் அமைதியுடன் இருந்திட நாம் போற்றுகிறோம்.

---

யாழ்ப்பாண மாநகரசபை
டிராக்டர் கொள்வனவுக்கான

## கேள்வி அறிவித்தல்

பாவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விற்பனை விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 500/- உம், மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/- உம் செலுத்தப்படுவதன் பேரில் 29-07-92 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 31-07-92 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதேதினம் பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 20 - 07 - 1992

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். [சி/4739]

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தமிழனாக: | தமிழுக்காக: |
|---|---|
| 23 | 23 |
| — | — |
| 10 | 07 |
| — | — |
| 1965 | 1989 |

### செல்வன் கந்தையா வேலாயுதகுமாரர்

(தம்பி)

அண்ணா!
தங்கத் தமிழில் தாகம் கொண்டீர்
தமிழீழ இலட்சியத்தை இதயத்திற் சுமந்தீர்
இறுதி வரைக்கும் உறுதியாய் இருந்தீர்
புலிகளின் இறுதி குருதியில் என்றீர்
குருதி சிந்தியே தமிழீழத்திற்கு உரமாகிவிட்டீர்
நிரை நிரையாக உங்கள் வழியில்
நிலையெடுத்து நிற்கிறார் புலிப்படை வீரர்
நிச்சயம் தமிழீழம் வெல்லும் வெல்லும்

வே. கந்தையா
வேலாயுதகுமாரர் வீதி,
சுன்னாகம். [2864]

---

## 45 - ம் நாள் நினைவஞ்சலி



---

## 1- ம் ஆண்டுநினைவலைகள்



| தமிழ்த்தாய் மடியில் | தமிழீழ மண்ணில் |
|---|---|
| 02 | 04 |
| — | — |
| 02 | 08 |
| — | — |
| 1972 | 1991 |

### கப்டன் தும்பன் (சூரி)

(சின்னத்தம்பி சூரியமூர்த்தி)

திதி 23 . 07 . 1992

தமிழீழ மண்ணில் விசுவாசம் கொண்டு
சின்ன வயதிலே போர்க்களம் குதித்தான் - தும்பன்
தன்னுயிரை துச்சமென நினைதது
எதிரியை நோக்கி வீறு கொண டெழுந்தான்
ஆனையிறவு மண்ணிலே காவியம் படைததான் தும்பன்

04-08-1991 அன்று ஆனையிறவில் களப்பலியான அனைத்து வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள். போராளிகளை இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

மட்டுவில் தெற்கு,
சிவன் கோவில் றோட்,
சாவகச்சேரி.
(2871)

உன் நினைவில் இருக்கும்
அன்பு அம்மா, அப்பா
சகோதர சகோதரிகள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

---

## நினைவு கூருகின்றோம். .

## 1992 - 07 - 23

1983 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். செல்லக்கிளி அம்மான்** (சதாசிவம் செல்வநாயகம் - பூதவராயர்வீதி, கல்வியங்காடு)

1989 ஆம் ஆண்டு கோண்டாவிலில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**கந்தையா வேலாயுதகுமாரர்** (வேலாயுதகுமாரர் வீதி, உடையார்வளவு, சுன்னாகம்)

கோண்டாவில் ரயில் நிலையத்திற்கு சமீபமாக தேசப் விரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான - யாழ். மத்திய கல்லூரி வர்த்தகப்பிரிவு மாணவன் -

**மகாலிங்கம் மகேஸ்வரன்** (நீர்வேலி)

சண்டிலிப்பாயில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**தசரதன்** (திருக்கோணமலை)

கிளிநொச்சி பரந்தன், முரசுமோட்டை 2-ம் கட்டைப்

தேச செயலாளர் திரு.ச.முருகேசபிள்ளை சம்பிரதாய பூர்வமாக நடமாடும் செயலகத்தைஆரம்பித்து வைத்தார். பிரதி செவ்வாய்க்கிழமைகள் தோறும் இயங்கவுள்ள பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் வல்வெட்டித்துறை நடமாடும் செயலகத்தில் தொண்டமானாறு தொடக்கம்பொலிகண்டிவரையான மக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென்றும் பிரதேச செயலாளர் திரு.ச.முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். (25)

## பாலர் கலை விழா

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை ஆதரவில் இயங்கும் ஞானசம்பந்தர் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நல்லை ஆதீன கலை பண்பாட்டு கழகம் நடாத்தும் ''பாலர் கலைவிழா'' நாளை வெள்ளிக்கிழமை 1-00 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக கலாநிதி க. கனகராசா அவர்களும் கலந்து கொள்கின்றனர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில்

(கொழும்பு)

இந்த முறை ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மூன்று லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப் பரீட்சை வரும் ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி நடைபெறும் என்றும்,

கடந்த ஆண்டுகளை விட இந்த முறை பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


மாவீர நீ வாழ்க வையம் உள் வரைக்கும்
உன் பேர் நிலைக்குமையா; கர்த்தரது பாதத்தில்
என்றும் அமைதியுடன் இருந்திட நாம் போற்றுகிறோம்.

15/16 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
[2862]

உமது பிரிவால் துயருறும்
தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள், உற்றார், உறவினர்

---

## ஓராண்டு நினைவஞ்சலி



## கப்டன் பாண்டியன்

(துரைசிங்கம் கிருஷ்ணதமார் (புருஸ்லி))

திதி 11.08.1992

வடலியடைப்பில் வீரஉதயம் 09.07.1972

கட்டைக்காட்டில் வீரச்சாவு 23.07.1991

கட்டைக்காட்டினில் வெட்டைவெளியினில்
கயவனின் கொட்டம் அடக்கிட
கட்டளை பெற்ற பாண்டியன்
நீ விட்டுச் சென்ற கட்டான இலட்சியம்
எம்மை வழிகாட்டும் என்பது நிச்சயம்
''நீ மடியவில்லையடா உன்கதை முடியவில்லையடா''

23-07-1991 அன்று கட்டைக்காட்டில் வீரச்சாவடைந்த அனைத்து வீரவேங்கைகளையும் நினைவு கூருகின்றோம்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
[2867]

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

---



## மேஜர் கந்தன்

(நாகேந்திரம் பாலசுந்தரம்)

வீரஜனனம் 15 . 03 . 1968

வீரச்சாவு 09 . 06 . 1992

பூ நகரில் பூத்தெழுந்த புலி வீரா!
எம்மினத்தின் விடுதலைக்காய் இளவயதில் சீற்றம் கொண்டாய்.

கந்தன் என்ற பெயருடனே களமதிலே - நீ
குதித்தாய் ஈழம் அது காண்போம் என்றாய்
எம்மண்ணை ஆழவந்த, எதிரிகளின் அணி அழிக்க
சிறு நாவற்குளம் நோக்கி படைகொண்டு சென்றாயே
அராஜக வாதிகளின் பல உயிர்களுக்கே கதை முடித்து
வெட்டவெளி தரையினிலே மார்பு தட்டிப் போரிட்டாய்
எதிரிகளின் திசையிலிருந்து உனை நோக்கி வந்த - குண்டு
உன் உடலில் பாய்ந்தவேளை கந்தா - உன்
சாதனைகள் வரலாறு ஆனதடா - எனினும்
உன்பணியை பின்தொடர வேங்கையணி விரையுதடா

09-06-1992 அன்று மன்னார் சிறு நாவற்குளம் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் மேஜர் கந்தனுடன் கூட வீரச்சாவெய்திய வேங்கைகள் மேஜர் ரவிசங்கர், லெப். அரவிந்தன், 2-ம் லெப். உதயச்சந்திரன் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தருணன் வீதி,
ஆலங்கேணி,
பூநகரி.

உன் பிரிவால் துயரும்,
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.
(2853)

---

**தசரதன்** (திருக்கோணமலை)

கிளிநொச்சி பரந்தன், முரசுமோட்டை 2-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மனோஜ்** (தயாபரன் - கிராஞ்சி, பூநகரி, மன்னார்)

**வெஸ்லி** (மகாலிங்கம் புவனேந்திரன் - கற்குழி, சாவகச்சேரி)

**சரவணன்**

**றேணு**

காங்கேசன்துறையில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**பிரசன்னா** (புதியாக்குட்டி தயாபரன் - தயாபரன் வீதி, புத்தூர் கிழக்கு)

யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அமுது** (ஐயாசாமி கிருஸ்ணமூர்த்தி - சுப்பர்மடம் பருத்தித்துறை)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட - மயிலாம்பா வெளியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்

வவுனியா - செட்டிகுளம் பகுதியில், சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து அப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் பாண்டியன் / புருஸ்லி** (துரைசிங்கம் கிருஸ்ணகுமார் - சங்கானை மேற்கு, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, யாழ்.)

**லெப். சிவா** [இராசப்பு அன்ரனி அமலநேசன் - கோபாலபுரம், நிலாவெளி, திருக்கோணமலை]

**பட்சன்** [சீனியர் உதயராசா - மத்தலோடை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்.]

**காசி** (மாயாண்டி ஞானராஜ் - பாலைப்பாணி, பாண்டியன்குளம்)

**கேதீஸ்** (சாந்தலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு)

**குரு** (வாமதேவன் விக்கினேஸ்வரன் (பாபு) - தங்கோடை, காரைநகர், யாழ்.)

**சுருளி** (சிவகுரு சண்முகராசா (அப்பன்) - ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பளை, யாழ்.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட கூலித் தொழிலாளியான செங்கலடி - 2 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி/4740]

சிந்தனைக்கு

நிமிர்ந்த முதுகெலும்பு நமக்கு இல்லாதவரை நினைத்தது நிறைவேறுமென கவை எலும்பைத் தொட்டு நம்புவதில் பலனில்லை.

- வில் ஹென்றி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிங்கள அரசின் இரட்டை வேடம்

மலையகத்தில் தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களிலும், நட்டத்தில் இயங்கி வந்த அரச தோட்டங்களிலும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு சிங்கள அரசாங்கம் பூர்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவது பல வருடங்களாக நடைபெற்று வரினும் அரசாங்கம் இவ்விடயத்தில் தற்பொழுது தீவிர கவனம் செலுத்துகின்றது.

சிங்கள அரசாங்கத்தின் இந்நடத்தையானது வடக்கு - கிழக்கு குடியேற்றத் திட்ட நடவடிக்கை போன்று துரிதமாக மேற்கொள்ளப்படவில்லையாயினும் தொடராக, ஆறுதலாக பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் மலையகத் தோட்டப் பகுதியில் சிங்களவரின் தொகையை அதிகரித்து மலையகத் தமிழரின் அரசியற் செல்வாக்கைக் குறைத்தலே நோக்கமாகும்.

மலையகத் தொழிலாளர்கள் நூற்றிஐம்பது வருடங்களுக்கு மேலாகியும் பெருந் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டங்களில் அமைக்கப்பட்ட லயங்களிலேயே அடைந்து கிடக்கின்றனர். 'கம்உதாவ' என்றும், பத்து லட்சம் வீடமைப்புத் திட்டம் எனவும் பறைசாற்றி வீடுகளை அமைத்து வரும் சிங்கள ஆட்சியாளர்கள் லயங்களில் முடங்கிக் கிடக்கும் தமிழர்களைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

தோட்டங்களில் வீடுகளை அமைக்கும் சிங்கள அரசாங்கம் அப்பகுதியில் நீண்டகாலமாகக் குடியிருப்பவர்களை கருத்திற் கொள்ளாமல் வெளி மாவட்டங்களில் இருந்தே சிங்களக் குடியிருப்பாளர்களைத் தெரிவு செய்கின்றது. இதேவேளை லயங்களில் இடவசதியின்றி லயங்களுக்கு முன்னால் /பின்னால் சிறு கொட்டில்களைப் போடுபவர்களை வேலையிலிருந்தே அரசாங்கம் விரட்டுகிறது. அதாவது, லயங்களை விட்டுத் தமிழ்த் தொழிலா

# தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரின்

# பரீட்சார்த்த பாலை மீன் வளர்ப்புத் திட்டம் வெற்றி

தமிழீழத்தின் பெரும் பகுதி கடல் வளத்தினால் சூழப்பட்டுள்ளது. மிக நீண்ட கடற்கரையினைக் கொண்டிருப்பதும், மீன்கள் பெருகுவதற்கு வாய்ப்பான கடலடித் தளமேடைகளைக்கொண்டிருப்பதும் இங்கு சாதகமான கடல் வளத்தினை ஏற்படுத்தியுள்ளது. இக்கடல் வளத்தினை ஆதாரமாகக்கொண்ட கடற் தொழிலானது இங்கு பாரம்பரியமான அடிப்படைத் தொழில் முயற்சியாகவும் இருந்து வருகிறது.

மேலும் இங்கு கடற்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வளங்களும், வாய்ப்புகளும் இருக்கின்றன. இவ்வாறு இருந்தும் தமிழீழத்தில் கடற் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எதனையும் பரந்த அளவில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளவில்லை. வேறு பகுதிகளில் கடற் தொழிலை நவீன மயப்படுத்துவதற்காக கடன் வசதிகளையும், தொழில் நுட்ப வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வரும் சிறிலங்கா அரசு இவ்வாறான முயற்சிகளை தமிழீழப் பிரதேசத்தில் மேற்கொள்ளாத நிலையில் நவீன கடற் தொழில் உபகரணங்களையோ, தொழில் நுட்ப வசதிகளையோ தமிழீழப் பிரதேசங்கள் பெற்றுக் கொள்ளாத போதிலும் சிறிலங்காவின் மொத்த மீன் உற்பத்தியில் 50 வீதத்திற்கு மேலான மீன் உற்பத்தி தமிழீழப் பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலங்கை புள்ளி விபர திணைக்களத்தின் தகவல்களின்படி 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்த மீன் உற்பத்தியாகப் பெறப்பட்ட 184, 010 மெற்றிக் தொன்களில் 104,320 மெற்றிக் தொன் மீன் உற்பத்தி அதாவது, சிறிலங்காவின் மொத்த மீன் உற்பத்தியில் 56.6 வீதமான மீன் உற்பத்தி தமிழீழப் பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், தற்போது சிறிலங்கா அரசின் கடல் வலயச் சட்டத்தினாலும், இராணுவ நடவடிக்கைகளினாலும் மட்டுமன்றி, ஆழ்கடல் மீன் பிடிப்புக்குத் தேவையான இயந்திர வள்ளங்களையோ, அவற்றுக்கான உதிரிப் பாகங்களையோ

உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் பல கடற்தொழிலாளர்கள் தமது ஜீவனோபாயத் தொழிலையும் இழந்துள்ளனர். அது மட்டுமன்றி இங்கு மிக மலிவாகவும், இலகுவாகவும் பெறக் கூடியதாக இருந்து வந்த விலங்குப் புரத உணவான மீனின் விலை என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது.

இந்நிலையில் இப்பிரச்சினைகளுக்கான தீர்வினைக் கண்டறியும் முயற்சியாகவும், தமிழீழத்தில் இனங் காணப்படாமலிருக்கும் அல்லது இனங் கண்டும் பயன்படுத்தப்படாமலிருக்கும் கடல் நீர்த் தொடுவாய்கள் மற்றும் கரையோர ஆற்றுப் பகுதிகளில் கரையோர மீன் வளர்ப்பை அறிமுகப்படுத்தவும், அதற்கான பயன் விளைவை ஆய்வுசெய்யுமுகமாகவும் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் குருநகரில் பரீட்சார்த்த பாலை மீனவளர்ப்புத் திட்டம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது.

குருநகர் கரையோரப் பகுதியில் 1.2 கெக்டேயர் விஸ்தீரணமுள்ள நிலப் பகுதியில் பாலை மீன் வளர்ப்புத் திட்டத்தினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கென மன்னார் மாவட்டத்தில் கிராஞ்சி என்ற இடத்திலிருந்து 2000 வரையிலான பாலை மீன் குஞ்சுகள் கொண்டு வரப்பட்டன. மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்குரிய தொழில் நுட்ப உபகரண வசதிகள் எதுவும் பயன்படுத்தப்படாமலேயே இவை கொண்டு வந்து சேர்க்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. மீன் குஞ்சுகளுக்குத் தேவையான ஒட்சிசனை அளிப்பதற்காக நீர் மாற்ற வேண்டிய அவசியம் இருந்ததன் காரணமாக தரை மார்க்கமாக இவற்றைக் கொண்டு வர முடியாத நிலையில் வலைப்பாட்டில் இருந்து கடல் வழியாகக் கொண்டு வரும்போது சிறிலங்கா அரசின் கடற்படைக் கப்பலில் இருந்து தீர்க்கப்பட்ட வேட்டுக்களுக்குத் தப்பியே வர வேண்டியிருந்தது. இவ்வாறு பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட பாலை மீன்கள் வளர்ப்புநிலை

நிறையையும் கொண்டிருந் கிறாம்தன. ஸ்ரீலங்கா அரசினால், நீர்கொழும்பில் பிற்றப் பண்ணை பகுதியில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட பாலை மீன் வளர்ப்புத் திட்டத்தில் சராசரியாக 24. 8 செ. மீ நீளத்தையும், 87. 78 கிராம் நிறையையும் கொண்டிருந்தன என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.

பரீட்சார்த்த பாலை மீன் வளர்ப்புத் திட்டத்தினை செயற்படுத்தும்போது, புறச் சூழல் ரீதியாக பல பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி இருந்தது. கடல் நீருடன் வளர்ப்பு நிலையத்தினுள் உட்புகுந்த பிற இன மீன்கள், வளர்ந்து, பாலை மீன் குஞ்சுகளை உண்டு அழித்தன. மேலும், கொக்கு, நீர்க்காகம் போன்ற பறவையினங்கள்மீன்களை உண்டுவந்தன. வளர்ப்பு நிலையத்தினுள் கடல் நீருடன் உட்புகுந்த கன்னா பாம்புகளும் மீன்களுக்குசேதத்தினை உண்டு பண்ணின. மழைக் காலங்களில் அயற் பகுதிகளிலுள்ள சாக்கடை நீர் மற்றும் கழிவுப்பொருள்கள் வெள்ளத்தால் அள்ளப்பட்டு வளர்ப்பு நிலையத்தினுள் கலந்தன. இதன் விளைவாக பாலை மீன்கள் சில தொற்று நோய்க்கு இலக்காகி வளர்ச்சி குறைந்த நிலையில் காணப்பட்டன. இவ்வாறு பல பிரச்சினைகளை எதிர் நோக்கி மேற்கொள்ளப்பட்ட 6 மாத கால எல்லையைக் கொண்ட குருநகர் பரீட்சார்த்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நம்பிக்கையை ஊட்டுவதாகவும், அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதாகவும் அமைந்தன.

தமிழீழத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மணலாறு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இயற்கையான முறையில் அமைந்திருக்கும் கடல் நீர்த் தொடுவாய்கள், ஆற்றுப் பகுதிகள் போன்றவற்றை சரியான முறையில் இனங் கண்டு, இப்பாலை மீன் வளர்ப்பை எளிய தொழில் நுட்ப முறைகளுடன் மேற்கொள்ளலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள முகத்துவார கடல் நீரேரியும் பெருமளவு பாலை மீன்கள்

பாலை மீன் வளர்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இங்கிருந்தும், இதற்கான ஆய்வு முயற்சிகள் இது வரை பரந்த அளவில் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கானமுதல் முயற்சியினை, தமிழீழத்தில் சுயசார்புப் பொருளாதார கட்டமைப்பினை உருவாக்குவதற்காக, இங்குள்ள வளங்களை இனங்காண்பதற்கும், அவற்றினைப் பயன்படுத்துவதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம்பரீட்சார்த்த நடவடிக்கையாக மேற்கொண்டது.

ஆழ்கடல் மீன்பிடி முயற்சிகள் பாதிக்கப்பட்ட நிலையில், இவ்வாறான கரையோர மீன் வளர்ப்பு முறைகள் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுமானால் தொழிலினை இழந்துள்ள கடற்றொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதுடன், தமிழீழத்தில்பரந்து கிடக்கும் கடல் வளத்தினை பயன்படுத்துவதற்கான வழியாகவும் இது அமையும். மேலும், இவ்வாறான கரையோர மீன் வளர்ப்பு முயறசியில் பாரம்பரிய கடற்றொழில் முறைகளை கையாளக் கூடியதாக இருப்பதனால், இன்றைய நிலையில் கிடைக்கக் கூடியதான வசதிகளை பயன்படுத்தி கடற் தொழிலாளர்கள் தமது தொழில்களைத்தொடர முடியும்.

மணலை மீன், மண்ணா மீன் போன்றனவும் உவர் மற்றும், நன்னீர் நிலைகளில் வளரக் கூடியனவாகும். இவ்வகை மீன் இனங்கள் கடற் பரபிலேயே இனவிருத்தியினை மேற்கொள்கின்ற போதிலும் இளம் மீன் குஞ்சுகள் ஆழமற்ற கரையோர நீர்ப்பகுதிகளையே நாடி வளர்கின்றன. கரையோரப்பகுதியில் ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இருமுறை பாலை மீன்கள் முட்டைகளை இடுகின்றன. சுமார் 24 மணித்தியாலங்களின் பின்னர் இம் முட்டைகளிலிருந்துவெளியேறும் குடம்பிகள் தெளிந்த கரையோரங்களை நாடிச் செல்லும், இதனால் கழிமுகங்களிலும், கரையோர நீர்ப்பகுதிகளிலும்

களின்படி, மன்னார் கரையோரப் பகுதிகளில் ஆண்டுக்கு 400 மில்லியன் வரையிலான பாலை மீன் குஞ்சுகளையும் புத்தளக் கரையோரப் பகுதியில் ஆண்டுக்கு 200 மில்லியன் வரையிலான பாலை மீன் குஞ்சுகளையும் பெற முடியும் என தெரிய வந்துள்ளது. இப்பகுதிகளில் சித்திரை தொடக்கம் ஆனி, ஐப்பசி தொடக்கம் மார்கழி வரையான காலங்களில் பாலை மீன் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஒரு கெக்டேயர் விஸ்தீரணமுள்ள வளர்ப்பு நிலையத்தில் 2,000 வரையிலான பாலை மீன் குஞ்சுகளை வளர்க்கலாம் என்ற அடிப்படையில், மன்னார் கரையோரத்தில் ஒரு ஆண்டில் பெற்றுக் கொள்ளக் கூடியதான 400 மில்லியன் குஞ்சுகளையும் 200,000 கெக்டேயர் விஸ்தீரணமுள்ள நீர்நிலைப் பகுதிகளில் வளர்க்க முடியும். தற்போதய நிலையில் 500 கெக்டேயரில் பாலை மீன் வளர்ப்பினை மேற்கொண்டால், ஒரு கெக்டேயரில் சராசரி உற்பத்தி 300 - 500 கிலோ வரை பெறலாம் எனக் கொண்டு கணிப்பிட்டால், 500 கெக்டேயரிலும் 250,000 வரையிலான மீனை அதாவது 250 மெற்றிக் தொன் மீனை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

தமிழீழத்தில் நிறைந்து கிடக்கும் வளங்களில் ஒன்றாக கடல் வளம் உள்ள போதிலும், இங்கு கடல் வளத்தினை நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்கான கடல் வள ஆய்வுகள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இது வரை மேற்கொள்ளப்படாதது வருத்தத்திற்குரியதே. இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பரீட்சார்த்தமாக குருநகரில் பாலை மீன் வளர்ப்புத் திட்டத்தினை ஆரம்பித்து பூர்த்தி செய்துள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் கடல் வள ஆய்விற்கான முன் முயற்சியினைத் தொடக்கி வைத்துள்ளது. காலத்தின் தேவை கருதி மேற்கொள்ளப்பட்ட

களை வேலையிலிருந்தே அரசாங்கம் விரட்டுகிறது. அதாவது, லயங்களை விட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள் வெளியில் பரவுவதை சிங்கள அரசாங்கம் மறைமுகமாகத் தடை செய்து வருகிறது.

இதேபோன்றே தோட்டத் தொழிலாளர் அரசியலில் பலம் பெறுவதைச் சிங்கள அரசாங்கம் விரும்பவில்லை. அரசியல் நெருக்கடிச் சூழ்நிலையின் காரணமாக மலையகத் தமிழருக்கு பிரஜா உரிமைகளை சிங்கள அரசாங்கம்வழங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டதாயினும் இவ் உரிமைகளை நடைமுறையில் பயன்படுத்த அரசாங்கம் தடையாகவே உள்ளது பிரஜா உரிமைகளை வழங்கியதாக அறிவித்த சிறிலங்கா அரசாங்கம் அவர்களை வாக்காளராகப்பதிவு செய்யபிரஜா உரிமைச் சான்றிதழ் அவசியமற்றதென வற்புறுத்துகிறது.

ஆனால்வாக்காளராகப் பதிவுசெய்வதற்கு பிரஜா உரிமைச் சான்றிதழ்களைஅதிகாரிகள்கோர முடியாது. ஏனெனில் சட்டத்தின்படி பிரஜா உரிமை பெற்றவர்களின் சந்ததியினர் வம்சாவளிப் பிரஜைகள் ஆவர். அவர்களுக்கு தனியான பிரஜா உரிமைச் சான்றிதழ் இல்லை. அவர்கள் தமது பெற்றோரின் சான்றிதழைக் காட்டினாலே போதுமானதாகும். இதனை அமைச்சர் தொண்டமானும் சுட்டிக்காட்டியுள்ளபோதும் சிங்கள அரச அதிகாரிகள் அவற்றைக் கவனத்தில் கொள்வதாக இல்லை. இவ்விடயத்தில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாமலே செயற்பட்டு வருகின்றனர். இவ் அதிகாரிகளின் நடத்தை காரணமாக குறைந்தது 50 சதவீதமான மலையக வாக்காளர்கள் தமது வாக்குரிமையை இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அதாவது இன்றுள்ள அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக மலையக மக்களை அணைப்பது போன்று காட்டிக் கொள்ள அரசாங்கம் முற்படுகின்ற அதேவேளை, மண்ணிலும் அரசியலிலும், அவர்கள் பலம் பெறுவதையும், பங்குபற்றுவதையும் மறைமுகமாக மறுத்தும்,தடுத்தும் வருகின்றது. இது சிங்கள அரசு போடும் இரட்டை வேடமாகும். மலையக தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு வழங்கிய பிரஜா உரிமை இலங்கை அரசியலில் ஏற்பட்ட நிர்ப்பந்தத்தின் காரணமாகவும், தேவையின் காரணமாகவும் வழங்கப்பட்டதே ஒழிய சிங்கள ஆட்சியாளர்கள் மனம் உவந்தோ, இ.தொ.க. நடத்திய பிரார்த்தனையினாலோ அல்ல. இந்நிலையில் இதனைப் பாதுகாக்க மலையக மக்கள் எப்பொழுதும் விழிப்பாகவும், தயாராகவும் இருக்க வேண்டும்.

வள்ளங்களையோ, அவற்றுக்கான உதிரிப் பாகங்களையோ அவற்றை இயக்குவதற்குத் தேவையான எரிபொருள்களையோ பெறமுடியாத நிலையில் ஆழ்கடல் மீன்பிடி முயற்சிகள் பாதிப்படைந்து மீன்

கொண்டுவந்து சேர்க்கப்பட்ட பாலை மீன்கள் வளர்ப்புநிலையத்தில் விடப்பட்டன. 2 - 3 சென்ரி மீற்றர் நீளமுடைய இப்பாலை மீன் குஞ்சுகள் திட்டத்தின் முடிவில் சராசரியாக 28. 5 செ.மீ நீளத்தையும்175

முகத்துவார கடல் நீரேரியும் பெருமளவு பாலை மீன்கள் ஒதுங்கி வளர்கின்ற படியால், அதற்கு பாலை மீன் மடு என்ற பெயரும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கடலுடன் தொடர்புடைய நீர்ப் பகுதிகளில் இவ்வாறான

இதனால் கழிமுகங்களிலும், கரையோர நீர்ப்பகுதிகளிலும் பாலை மீன் குஞ்சுகளை பிடிக்கக் கூடியதாக உள்ளது. 1969 ஆம் ஆண்டளவில் செல்வி. இராமநாதனால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு

துள்ளது. காலத்தின் தேவை கருதி மேற் கொள்ளப்பட்ட இம் முயற்சியானது தமிழீழப் பகுதிகளில் கடல் வள ஆய்வுகளை மேற் கொள்வதற்கான எதிர் கால நம்பிக்கைகளை ஊட்டுவதாக அமைந்துள்ளது.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்.

# அயோத்தி வளாகத்தை அரசு கையேற்க வேண்டும்

(டில்லி)

மத்திய அரசின் நிச்சயமற்ற கொள்கையும், செயலற்ற தன்மையும் அயோத்தியா குறித்த நீதிமன்ற ஆணையை மீற முயலுவோருக்குத்தான் உதவிடும் என்று தேசிய முன்னணியும் இடதுசாரிக் கட்சிகளும் குற்றஞ் சாட்டியுள்ளன.

: நடவடிக்கை எடுக்காமிலிருந்தால் நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படும்'' என்று வி.பி. சிங் சோமநாத் சட்டர்ஜி, இந்திரஜித் குப்தா மற்றும் பல தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அயோததியில் பிரச்சினைக்கு உட்பட்ட வளாகம் முழுவதையும் மத்திய அரசாங்கம் இப்போது கூட தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ள முடியும் என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

## ரஷ்ய நிருபர் மரணமானார்

(லண்டன்)

அனுபவமிக்க ரஷ்ய செய்தியாளரும், மேற்கு நாட்டு பத்திரிகைகளுக்கு கிரம்ளின் சம்பந்தமாக எழுதிவந்தவரும், பல பிரதான இரகசியங்களை வெளியிட்டவருமான விக்டர் லூயிஸ் லண்டனில் காலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

64 வயதான லூயிஸ் பல பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு கிரம்ளின்சம்பந்தமான செய்திகளை எழுதினார்.

1964 ஆம் ஆண்டு சோவியத் தலைவர் குருஷ்சேவ் பதவியிலிருந்து வீழ்ச்சி பெற்றமை, 1980 ஆண்டு கொஸிஜின் மரணம் ஆகியவற்றை உலகுக்கு முதலில் வெளிப்படுத்தியவர் லூயிஸ் ஆவார்.

லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் சத்திரசிகிச்சைக்கு பின் மாரடைப்பால் அவர் மரணமுற்றார்.

## ஜேம்ஸ் பேக்கரின் பதவி மாற்றம் செய்யப்படலாம்?

(வாஷிங்டன்)

அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது தேர்தல் இயக்கத்துக்கு உதவும் வகையில் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேக்கரை வெள்ளை மாளிகைக்கு மாற்றக் கூடும் என வாஷிங்டனில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கில் பேக்கரின் வெளிநாட்டுக் கொள்கையை புகழ்ந்துரைத்த குடியரசுக் கட்சி தேர்தல் இயக்க நிர்வாகி பிரெட்மாலெக் இத்தகைய தற்காலிக மாற்றம் ஜனாதிபதியின் அழைப்பாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து ஏ.பி.ஸி. டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் தெரிவிக்கையில் பேக்கர் தேர்தல் இயக்கத்துக்கு அல்லது வெள்ளை மாளிகைக்கு வருவாரா? இல்லையா? என்பது குறித்து தெரியாது எனவும் ஆனால் அவர் வெளிநாட்டு அமைச்சு வெள்ளை மாளிகை தேர்தல் இயக்கம் ஆகிய எதில் இருந்தாலும் அபாரமாக வேலை செய்வார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை மத்திய கிழக்கு சமாதான முயற்சியைத் தொடரும் பொருட்டு இஸ்ரேலுக்கு வந்த பேக்கர் தாம் விரைவில் வெளிநாட்டு அமைச்சிலிருந்து வெளியேறும் சாத்தியத்தை நிராகரிக்கவில்லை.

உப ஜனாதிபதி குவைலுக்குப் பதிலாக டேக்கர் நியமிக்கப்படலாம் என்ற வதந்திகள் சென்றவாரம் பரவியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## தொழிற்கட்சித் தலைவராக ஜோன் ஸ்மித் தெரிவு

பிரித்தானிய தொழிற் கட்சித் தலைவராக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணியான 53வயது ஜோன்ஸ்மித் தொழிற்கட்சித் தலைமைத்துவத்துக்காக விசேட வாக்களிப்பில் 91சதவீத வாக்குகள் பெற்று தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடந்த தேர்தலிலும் தோல்வி கண்டு தொடர்ந்து நான்கு தடவை தோல்வியைத் தழுவிய தொழிற்கட்சி புதிய தலைவரை தேர்ந்தெடுக்க இருப்பதாக முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## பாப்பரசரைக் கொல்ல சோ.யூனியன் தூண்டியது

(ரோம்)

1981ஆம் ஆண்டு பாப்பரசரைக் சுட்டுக்கொல்லுமாறு தன்னைத் தூண்டியது சோவியத் யூனியன் என இத்தாலி சிறைச்சாலையொன்றில் பாப்பரசர் கொலைமுயற்சிக்காக ஆயுள் தண்டனை அனுபவிக்கும் துருக்கி நபர் மெஹ்மத் அலி அக்கா தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் குடல் கட்டி சம்பந்தமாக சத்திரசிகிச்சை செய்துள்ள வேளையில் நிருபர்கள் இந்தஆயுள் தண்டனை கைதியை சந்தித்தனர் அந்தப் பேட்டியின் போதே மெஹ்மத் அலி இதனைத் தெரிவித்தார்.

## ஆப்கான் தலைநகரில் சண்டை தொடர்கிறது

(ஜெனிவா)

ஆப்கான் தலைநகர் காபூலில் சண்டைகள் தொடர்ந்து இடம் பெறுவதாகவும், நகரிலுள்ள மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக வருவோரின் தொகை அதிகரித்து இருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கமிட்டியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இக் கமிட்டி வெளியிட்டிருக்கும் அச் செய்திக் குறிப்பில் மேலும் சிவிலியன்களையும், மருத்துவமனைகளையும் தாக்க வேண்டாமெனப்போரிடும் குழுக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# காஷ்மீரில் இந்தியா ஆட்சியை கைவிடவேண்டும்

## -நவாப்ஷரீப்

(முஸாபராபாத்)

இந்தியா காஷ்மீரில் அதன் ஆட்சியைக் கைவிடவேண்டும் என கடந்த ஞாயிறன்று வலியுறுத்திக் கேட்டிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப் காஷ்மீரில் இந்தியப் படைகளால் இழைக்கப்படும் அட்டூழியங்கள் உலகின் மனச்சாட்சியை உலுக்கப் போவதாகவும் சூளுரைத்துள்ளார்.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீரின் (அசாத்காஷ்மீர்) தலைநகரான முஸாபராபாத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் காஷ்மீர் விடுதலை அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை. அந்நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. காஷ்மீரிகள் ஏற்கனவே தங்களது தலைவிதியை தீர்மானித்து விட்டார்கள். இந்தியாவுடன் வாழ அவர்கள் விரும்பவில்லை,

இதற்கிசைய இனிமேல் தீர்மானத்தை எடுக்கவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே உரியது என்று குறிப்பிட்டார்

இத்தீர்மானத்தை இந்தியா எவ்வளவு விரைவாக எடுக்கின்றதோ அந்தளவுக்கு அது நல்லது. காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுடன் மூன்றாவது யுத்தம் ஒன்றை செய்ய பாகிஸ்தான் விரும்பவில்லை.

ஆனால் காஷ்மீர்விடுதலைப் போராளிகளுக்கு நாம் அரசியல் மற்றும் தார்மீக ஆதரவுகளை வழங்கியே தீருவோம் என நவாப் ஷரீப் தமது உரையில் தெரிவித்தார்,

முழுக் காஷ்மீரும் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டும் என அசாத் காஷ்மீர் அரசியல் தலைவர்கள் கோரிக்கை விடுத்த 43ஆவது வருடாந்த தினத்தை முன்னிட்டு இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேதாரணியம் கடற்பரப்பில் பலத்த துப்பாக்கிச் சண்டை

வேதாரணியம் கடலில் நேற்று முன்தினம் நடமாடிய இருபடகுகளை பிடிக்க இந்தியக் கடற்படையினர் முயன்ற போது இரு பகுதியினருக்கும் இடையே பலத்த துப்பாகிச் சண்டை இடம் பெற்றுள்ள.து

இதையடுத்து சம்பந்தப்பட்ட இரு படகுகளும் தப்பிச் சென்றதாக தமிழக பொலிஸ் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தபால்

தற்பொழுது அரசாங்க சேவைக்கும் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படும் இலவச தபால் சேவை அதிகார சபையினால் வழங்கப்பட மாட்டாதெனத் தெரிகிறது.

காங்கேசன்துறையிலிருந்து

# பருத்தித்துறைக்கு கப்பல் மூலம் உணவு

(நமது நிருபர்)

காங்கேசன் உணவுக்களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்களை கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவர துரித நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

இதன் படி ''மரினால்'' என்ற கப்பல் மூலம் காங்கேசன் உணவுக்களஞ்சியத்தில் இருந்து 2000மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. (பா)

## நாளை

டப் படும் என கொழும்'பில் இருந்து யாழ். அரச அதிபர் அனுப்பியுள்ள செய்திக் குறிப் பொன்று தெரிவிக்கின்றது(பா

## மேலதிக

வில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் இதுவரை அனுமதி வழங்கப்பட்டதாக தகவல் எதுவும் இல்லை.

மேலதிக கப்பல்கள் அனுமதிக்கப்பட்டவுடன்மண்ணெண்ணெய், சவர்க்காரம், தேங்

---


### முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வி சுகன்யா சிவசுப்பிரமணியம்

காரைநகரைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் நந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுகன்யா தனது முதலாவது பிறந்ததினத்தை 23-07-92 இன்று வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, சித்தப்பாமார், சித்தி மற்றும் உறவினர்களும் நல்லூர் முருகன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

ரெயில் றோட்
கொக்குவில் (2878)


---

## நினைவிற்கு

வீர ஜனனம்
21 – 06 – 19[illegible]3



வீரச்சாவு
23 – 07 – 1983

### லெப்.செல்லக்கிளி அம்மான்

(சதாசிவம் செல்வநாயகம் - கல்வியங்காடு)

இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை.

திருநெல்வேலி கிழக்கு (2873)

மாதர் சங்கம்
வாலையம்மன்
சன சமூக நிலையம்

---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

### விசேட பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்

யாழ். கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவதால், மேற்படி கிளையின் விசேட பொதுக் கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 23-08-92 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 - 30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யுபுளி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளை செயற்குழு உறுப்பினர் பதவிக்கான நியம


---


### வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான பின்வரும்

**விரிவுரைகள் 25-07-1992 -ல் ஆரம்பமாகின்றன**

கலைமுதற் தேர்வு [G. A. Q]
வர்த்தக முதற் தேர்வு [First in Commerce]

1992 செப்ரம்பர் மாதம் நடைபெற விருக்கும் பரீட்சைக்குரிய வினாவிடை விரிவுரைகள் 02-08-1992 இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.
(சி 4735)


---


### கம்பியூட்டர் கல்வி



[] Basic
[] Pascal
[] dBase III+
[] Lotus 1-2-3
[] Word Star 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
**24-07-92**

மேலதிக விபரங்களுக்கு:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்**

37, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

கிளைகள்:
வடமராட்சியில்: சதாபொண்ஸ், அல்வாய் கிழக்கு, அல்வாய்.
தென்மராட்சியில்; சயன்ஸ் சென்ரர், மடத்தடி, சாவகச்சேரி.
(சி 4743)


---


### பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31. 07 .92ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

முருகன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

ரெயில் றோட்
கொக்குவில் (2878)

## மரண அறிவித்தல்

## சங்கரலிங்கம் செந்தில்குமரன்

யாழ். நாயன்மார்கட்டு இல. 51, ஜெயவர்த்தனா வீதி (இராஜேஸ்வரி வீதி) யைச் சேர்ந்த சங்கரலிங்கம் (முன்னாள் இ.போ.ச. சாரதி கோண்டாவில் டிப்போ) புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் செந்தில்குமரன் அகால மரணமானார். இவர் திருமதி சியாமளா பாலச்சந்திரன் (கிளிநொச்சி), திருமதி மஞ்சுளா செல்வநாயகம் (ஜெயம் - கிளிநொச்சி), திருமதி பிரேமளா தங்கராஜா, திருமதி கோமளா தவபாலசிங்கம், திருமதி சரளா தர்மராஜா, திருமதி மங்களா (ஜெனி) ஜெபனேசன் (நக்கீரன்), வாசுகி (அர்ச்சனா - தமிழீழ விடுதலைப் புலிகள்), கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துக்குமாரு மனோகரின் (பசீர்க்காக்கா) ஒன்றுவிட்ட சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4.00 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

51, ஜெயவர்த்தனா வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்:
மு. மனோகர்
(பசீர்க்காக்கா)

[சி/4747]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 3961

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-5760, 24-5623, 24-5809, 22-6897, 26-1735, 27-5775, 26-535, 42-7312, 27-9033, 27-3910, 27-1794, 24-9327, 42-0849, 24-4707, 36-4230, 36-5707.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
42-2355, 41-4129, 42-3815, 24-1040, 40-4429, 26-736, 26-3690, 28-3676, 36-3438, 27-5417, 26-3998. 36-5066, 36-6822, 25-3654, 25-8105, 25-3302, 25-5741, 37-3827.

### மேலதிக

வில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் இதுவரை அனுமதி வழங்கப்பட்டதாக தகவல் எதுவும் இல்லை.

மேலதிக கப்பல்கள் அனுமதிக்கப்பட்டவுடன்மண்ணெண்ணெய், சவர்க்காரம், தேங்காயெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வானொலிச் செய்தி ஒன்றின் மூலம் யாழ். செயலகத்துக்கு அறிவித்திருக்கிறார். (பா)

### நீதி

தனை மேற்படி மன்றுக்களின் உறுப்பினர்களுக்கும், அனைத்து தமிழீழ மக்களுக்கும் தமிழீழ நீதி நிர்வாகப்பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன் சகல இணக்க மன்று, ஆரம்ப நீதிமன்று உறுப்பினர்களையும் தத்தமது கோட்ட (பிரிவு) நீதி நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### தரித்துச்

சுங்க விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு சோதனையிடப்பட்டன.

ஆனால், இனி இவை சுங்க விதிகளிலிருந்து விலக்குப் பெறும் என்றும், தரித்துச் செல்லும் பயணிகள் தங்கம் உட்பட பெறுமதி வாய்ந்த பொருள்களை தம்முடன் எடுத்து வருவதற்கு எந்தவித தடையும் இருக்க மாட்டாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

### உடுகம்பொலவின்

மத்தியில் வெறுப்பைத் தூண்டியது உட்பட நான்கு குற்றச்சாட்டுக்கள் உடுகம்பொலவிற்குஎதிராக சுமத்தப்பட்டுள்ளன.

### வெற்றிலைக்கேணி

அமைச்சரின் இவ் விஜயத்தின் போது கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஹமில்டன் வனசிங்காவும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவதால், மேற்படி கிளையின் விசேட பொதுக் கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 23-08-92 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 - 30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யுபுளி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.கிளை செயற்குழுஉறுப்பினர் பதவிக்கான நியமனங்கள் 10-08-92 முதல், 14-08-92 பிற்பகல் 4-00மணி வரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். (இதற்கான படிவங்களை எமதுபணிமனையில் ரூபா10/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.)

நியமனப் பத்திரங்களை 16 08 92 பிற்பகல்4-00 மணி வரை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.
11-07-92க்கு முன் அங்கத்துவ பணம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டு/அங்கத்துவ அட்டை பெற்றவர்கள் மட்டும் எதிர்வரும் கிளைத் தேர்தலில் பங்குபற்ற உரித்துடையவர் ஆவர்.

### பிரிவு வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 09-08-92-ம் திகதி வருடாந்த பொதுக் கூட்டம் பின்னர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். இக்கூட்டங்களில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும்.

அ. பிரிவிற்கான புதிய செயற்குழு உறுப்பினர்கள்.
தெரிவு 1992/1993

ஆ. கிளைப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் 30 கிளைச் சபை பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30கிளைச் சபை பிரதிநிதிகளின் முழுப்பெயர், அங்கத்துவ அட்டை இலக்கம், தே. அ. அ. இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர், யாழ். கிளை கௌரவ செயலாளருக்கு 10-08-92 பிற்பகல் 4-00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரிவுகளின் நியமனம் 26-07-92முதல் 30-07-92 வரை பிரிவு பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். பிரிவுகளின் நியமன வாபஸ் 02-08-92 பிற்பகல் 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். (இதற்கான படிவங்களை ரூபா 10/- செலுத்தி பிரிவு பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.)

பிரிவு வருடாந்த பொதுர்கூட்டம் நடைபெறும் இடம் ஒவ்வொரு பிரிவுகளால் கிளையின் கௌரவ செயலாளருக்கு 25-07-92 பிற்பகல் 4-00 மணிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

73, கண்டி. வீதி,
யாழ்ப்பாணம்,
20-07-92.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

(4738)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31. 07 .92ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

(1) கணக்கு இலிகிதர்
(2) சஞ்சிகை உதவி ஆசிரியர்

கணக்கு இலிகிதர்: தகைமைகள்
க. பொ. த (உயர்தரம்) கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
வயதெல்லை:- 20 தொடக்கம் 40 வரை

சஞ்சிகை உதவி ஆசிரியர்:- தகைமைகள்
க. பொ. த. (சாதாரணம்) எழுதுவதில் திறமையும், செய்திகள் சேகரிப்பதில் ஆர்வமும் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.
வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

விண்ணப்பம் அனுப்பும் முகவரி:
பொறுப்பாளர்,
பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம்
25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4744)

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ். கிளை தலைமையகம்
### யாழ். பிரிவு புதிய இடைக்கால
## நிர்வாகசபை உறுப்பினர்கள்

21-07-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். பிரிவு கந்தோரில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | - திரு. கே. வைத்தீஸ்வன் |
| உப தலைவர் | - திரு. எம். தம்பித்துரை |
| செயலாளர் | - திரு. எஸ். எஸ். மரியதாஸ் |
| பொருளாளர் | - திரு. ஜி. எஸ். வேலாயுதம் |

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**

செல்வி. எல். பி. தேவா
திரு. எப். ஆர். எப். அருட்சோதி
திரு. எ. குணரட்ணம்
திரு. எஸ். தவசீலன்
திரு. கே. முருகமூர்த்தி

இவர்கள் இடைக்கால நிர்வாககுழுஉறுப்பினராகவும், பிரிவு தேர்தல் ஆயத்தகுழு உறுப்பினராகவும் செயற்படுவர்..

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
22-07-92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

((சி 4745)